


மனித வளம் குறித்து பேசாத நபர்கள் இல்லை எனுமளவிற்கு இது குறித்து அதிகமாகப் பேசப்படுகிறது. நமது நாட்டின் அமைச்சகத்தில் கூட 'மனித வள மேம்பாட்டுத் துறை' என்ற ஒரு துறையுண்டு.

இவைகளின் மூலம் 'மனித வளம்' என்பது மிகவும் முக்கியத்துவமும், மகத்துவமும் வாய்ந்தது என்பதை நம்மால் உணர முடிகின்றது.

இதனடிப்படையில் மனித வளம் சார்ந்துள்ள சில தகவல்களையும், அதனை எவ்வாறு கண்டுபிடித்து, பயன்படுத்துவது? என்பது பற்றிய விஷயங்களையும் இந்த ஜும்ஆவில் நாம் பகிர்ந்து கொள்ளவிருக்கிறோம்.

## இஸ்லாமியப் பார்வையில் மனிதவளம்

பொதுவாக மனித வளம் குறித்து அறிஞர்கள் கூறும் போது 'ஹிடன் பொடென்ஷியஸ்' எனும் மனிதனுக்குள் மறைந்திருக்கும் ஆற்றல்களை கண்டறிந்து கொண்டு வந்து அவற்றை சுத்தப்படுத்தி வளர்ச்சி பெறச் செய்ய வேண்டும் என்கின்றனர்.

இது விஷயத்தில் இஸ்லாத்தின் வெளிப்பாடுகள் மிகப் பெரும் முன்மாதிரியாகவே அமைந்துள்ளது. அதாவது மனித வளங்களை கையாளும் விஷயத்தில் உள்ள பின்வரும் மூன்று படிநிலைகளை மிக

அற்புதமாக கையாண்ட ஒரு கொள்கையாகவே இஸ்லாம் திகழுகிறது.

1.மனித வளங்களை கண்டறிதல் (IDENTIFY)

2.கண்டறியப்பட்ட மனித வளங்களை பரிசுத்தமாக்குதல். (PURIFY)

3.சுத்தப்படுத்தப்பட்ட மனித வளங்களை வளர்ச்சி நிலைக்கு கொண்டு செல்லுதல். (DEVOLOPMENT)

அடுத்தடுத்துள்ள இந்த செயல் திட்டங்களைப் பயன்படுத்தி ஆற்றல் மிக்க மனித வளங்களை இஸ்லாம் உருவாக்கியதன் பின்னணியில் பல்வேறு செய்திகளை நாம் கோடிட்டுக் காட்ட முடியும்.

**மனிதனைப் பற்றி இஸ்லாத்தின் அறிமுகம்**

இஸ்லாம் மனிதனை கண்ணியமானவன் என்றே அறிமுகம் செய்கிறது;

وَلَقَدْ كَرَّمْنَا بَنِيْٓ اٰدَمَ

ஆதமுடைய மகனை நாம் சங்கைபடுத்தியுள்ளோம்.

**(அல்குர்ஆன் - 17 : 70)**

இவ்வசனம் ஒட்டு மொத்த மனிதர்களுமே சங்கையானவர்கள்தான் என்ற கருத்தைச் சொல்கிறது.

சூரத்துல் பகராவின் ஒரு வசனம் மனிதனை இறைபிரதிநிதி (கலீஃபா) என்ற அந்தஸ்தை வழங்கி கௌரவிக்கிறது. சூரத்துத் தீன் உடைய ஒரு வசனமோ 'மனிதன் அழகிய படைப்பாகவே படைக்கப்பட்டுள்ளான்' என்ற செய்தியைச் சொல்கிறது. இவைபோக உலகில் படைக்கப்பட்டுள்ள கோடான கோடி படைப்பினங்களுக்கு மத்தியில் மனிதனை சிறந்த படைப்பு (اشـــــــرف المخلوقات) என அறிவிப்புச் செய்கிறது இஸ்லாம்.

இப்படி தலைசிறந்த படைப்பாக உள்ள மனிதர்களின் பல்வேறு ஆற்றல்களை இனங்கண்டு அவற்றை தூய்மைப்படுத்தி வளர்ச்சி நிலைக்கு கொண்டு செல்வதையே இஸ்லாம் விரும்புகிறது.

**மனிதர்கள் சுரங்கங்கள்**

மேற்கூறப்பட்ட இஸ்லாத்தின் அடிப்படைகளின் மூலம் 'மனித வளம்' சார்ந்து என்ன நிலைபாட்டை இஸ்லாம் வைத்துள்ளது என்பதை நாம் புரிந்து கொண்டோம். அந்த அடிப்படைக்கு வலு சேர்க்கும் விதமாகவே பின்வரும் நபிமொழி அமைந்துள்ளது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்;

اَلنَّاسُ مَعَادِنٌ كَمَعَادِنِ الذَّهَبِ وَالْفِضَّةِ

மனிதர்கள் சுரங்கங்கள்; தங்கம், வெள்ளியின் சுரங்கங்களைப் போன்று.

**(புகாரீ)**

மனித வளம் சார்ந்த விஷயங்களில் மேற்கூறப்பட்ட நபிமொழி பல்வேறு ஆச்சரியமான தகவல்களை நமக்கு உணர்த்துகின்றது. மனிதர்களை சுரங்கங்களுக்கு ஒப்பீடு செய்ததே வியக்கத்தக்கதாகும். இந்நபிமொழியை சற்று விரிவாக யோசித்தால்;

**முதலாவது**

சுரங்கம் என்பது கண்ணுக்குத் தெரியாது. முதலில் அது கண்டுபிடிக்கப்பட வேண்டும். அதன்பிறகே அதனுள் தங்கம் உள்ளதா? வெள்ளி உள்ளதா? என்பதையெல்லாம் அறிந்து கொள்ள முடியும். இது போன்றே மனிதனுக்குள் புதைந்து கிடக்கும் திறன்கள் கண்டு பிடிக்கப்பட வேண்டும்.

**இரண்டாவது**

கண்டு பிடிக்கப்பட்ட தங்கம் - வெள்ளி இவற்றுடன் கனிமங்களும், தாதுப் பொருட்களும் கலந்து கிடக்கும். அவற்றை சுத்தப்படுத்தினால்தான் சுத்தமான தங்கம், வெள்ளியைப் பெற முடியும். இது போதன்றே மனித திறன்களை கண்டுபிடித்து பிறகு அவற்றை தூய்மைப்படுத்த வேண்டும்.

**மூன்றாவது**

மேற்சொன்ன இருபடி நிலைகளைக் கடந்த பிறகுதான் வளர்ச்சி நிலையை நோக்கி நகர முடியும். இது தங்கம் – வெள்ளிக்கு மட்டுமல்ல;

மனிதர்களுக்கும் இப்படித்தான்!

இந்நபிமொழியின் அடிப்படையில் மனித வளங்களை உருவாக்குவதன் முதல் முயற்சியாக மனிதர்களின் தனித் திறமைகளை கண்டு பிடிக்க வேண்டும்.

**மனிதனிடம் என்ன திறன்கள் உள்ளது?**

மனிதனிடமுள்ள திறன்கள் சார்ந்து பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டாலும் பொதுவாக மனிதனது திறன்கள் பின்வரும் ஐந்து விஷயங்களில் அமைந்துள்ளன.

1.அறிவு வளம். (INTELLECTUAL RESORCE)

2.மன வளம். (MENTAL RESORCE)

3.ஆன்மீக வளம். (SPRITUAL RESORCE)

4.ஒழுக்க வளம். (MORAL RESORCE)

5.உடல் வளம். (PHYSICAL RESORCE)

மனிதனிடமுள்ள இந்த ஐந்து வளங்களையும் கண்டறிந்து (IDENTIFY), அவற்றை சுத்தப்படுத்தி (PURIFY), வளர்ப்பதுதான் (DEVOLOPMENT) மனித வள மேம்பாடு விஷயத்தில் இஸ்லாத்தின் அடிப்படையாகும். இஸ்லாம் இந்த ஐந்து விஷயங்களையும் கடந்த கால மனித சமூகத்திடம் எவ்வாறெல்லாம் உருவாக்கியது என்பதை ஒவ்வொரு தலைப்பையும் சற்று விரிவாக ஆய்வு செய்வதன் மூலம் நம்மால் புரிந்து கொள்ள முடியும். அதற்கு முன்னால் மனித வளங்கள் கண்டு பிடிக்கப்பட வேண்டியதன் அவசியமென்ன? என்பதை புரிய வேண்டும்.

**மனிதனின் திறன்கள் கண்டறியப்பட வேண்டியதன் அவசியம்**

மனித வளத்தினால்தான் காரியங்கள் நிகழுகின்றன. இந்நிலையில் மனித வளங்கள் கண்டுபிடிக்கப்படாமல் போனால் ஒரு சூழலை எவ்வாறு எதிர் கொள்வது? என்பதைக் கூட அவன் தெரிந்து கொள்ள முடியாமல் போய்விடும்.

**உதாரணமாக ;**

தெருவில் நடந்து செல்லும் ஒரு பெண்ணை சில கயவர்கள் மானபங்கப்படுத்த முயற்சிக்கிறார்கள் என வைத்துக் கொள்வோம்.

இந்த சூழலில் உடல் பலம் இருந்தால் அந்த கயவர்களை இரண்டு தட்டு தட்டி அப்பெண்ணை பாதுகாப்போம். இல்லை உடல் பலம் இல்லாதவர்கள் என்றால் தன் அறிவு பலத்தை பயன்படுத்தி காவல்துறைக்கு தகவல் கொடுக்கலாம். அதுவும் இல்லை தனக்கு முக்கிய அலுவல்கள் இருந்தாலும் இந்த இடத்தில் எனது தங்கை இருந்தால் நான் விட்டுச் செல்வேனா? இதை கண்டு கொள்ளாமல் சென்றால் நான் அல்லாஹ்விற்கு பதில் சொல்ல வேண்டி வருமே என்ற எண்ணம் மேலிடுகிறது. இப்போது அவனுள் ஆன்மீக உணர்வு வேலை செய்கிறது.

ஒரு பெண் பாதிக்கப்படக்கூடாது; இந்த இடத்தில் அவளுக்கு இந்தத் தவறு நிகழ்ந்து விடக்கூடாது என்ற எண்ணம் மேலிடும்போது அவனது ஒழுக்க வளம் வேலை செய்கிறது.

மனிதர்களுடன் இணைந்துள்ள இந்த ஐந்து வளங்களுமோ அல்லது ஐந்தில் ஒன்றோ சரியாக இயங்கும் பட்சத்தில் ஒரு காரியம் சிறப்பாக நடைபெறுகிறது; நடைபெற முடியும்.

மனித வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, வளர்க்கப்பட வேண்டியதன் மற்றொரு அவசியம் உலகில் பெரும்பான்மையான நபர்கள் ஏதோ வாழ்ந்தோம், ஏதோ அனுபவித்தோம், ஏதோ வாழ்க்கை முடிந்தது என்று இலக்கில்லாமல் வாழுகிறார்கள். காரணம் அவர்களது தனித்திறன்கள் கண்டுபிடிக்கப்படாததே! அதனை கண்டுபிடித்துக் கொடுக்கப்பட்டிருந்தால் அவனது வாழ்வு இலட்சியமுள்ளதாக அமைந்திருக்கும். இக்கருத்துக்களின் அடிப்படையில் மனித வளங்கள் எந்தளவிற்கு முக்கியத்துவம் பெறுகின்றன என்பதை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

**மனித வளங்களை எவ்வாறு கண்டுபிடிப்பது?**

மனித வளங்களை கண்டறிவதற்கு குர்ஆன் அடிப்படை என்றால் அதற்கான வழிமுறையாக அண்ணல் நபியின் வழிகாட்டல் அமைந்துள்ளது.

திருமறையின் ஓர் இறைவசனம் இவ்வாறு அமைந்துள்ளது;

الر ۚ كِتَابٌ أَنزَلْنَاهُ إِلَيْكَ لِتُخْرِجَ النَّاسَ مِنَ الظُّلُمَاتِ إِلَى النُّورِ بِإِذْنِ رَبِّهِمْ إِلَىٰ صِرَاطِ الْعَزِيزِ الْحَمِيدِ

(முஹம்மதே!) இது ஒரு வேதமாகும். இதனை உம்மீது நாம் இறக்கியுள்ளோம். மக்களை அவர்களுடைய இறைவனின் உதவி கொண்டு இருளிலிருந்து வெளியேறி ஒளியின் பக்கம் நீர் கொண்டு வர வேண்டும் என்பதற்காக!

**(அல்குர்ஆன் - 14 : 01)**

எனவே திருமறைக் குர்ஆனின் அடிப்படையே மனிதர்களை இருளிலிருந்து வெளியேற்றி வெளிச்சத்திற்கு கொண்டு வருவதுதான். பல்வேறுபட்ட மனநிலை கொண்ட மனிதர்களை இருளிலிருந்து வெளிச்சத்திற்கு இந்த அருள்மறைதான் கொண்டு வந்தது.

பிலால் (ரளி), உமர் (ரளி) போன்றவர்களையெல்லாம் மாற்றியமைத்தது திருமறையின் வழிகாட்டல்தான் என்றால் அது மிகையாகாது.

**நபி (ஸல்) அவர்களின் வழிமுறை**

உலகிலுள்ள ஒவ்வொரு பொருட்களையும் மாற்றியமைப்பதற்கு ஒரு வழிமுறை கையாளப்படுகிறது. தங்கத்தை சீரமைக்க ஒரு வழிமுறை; வெள்ளியைச் சீரமைக்க ஒரு வழிமுறை; நிலக்கரியை சிரமைக்க ஒரு வழிமுறை என்பது போன்று மனிதர்களை சீரமைக்கவும் ஒரு வழிமுறையுண்டு. அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்களது அழகிய வாழ்வு முன்மாதிரியாகும்.

நபி (ஸல்) அவர்கள் மனித வளங்களை எவ்வாறு கண்டறிந்தார்கள் என்பதற்கு நிறைய ஆச்சரியமான சம்பவங்களுண்டு.

**சம்பவம் - 1**

நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை தஹஜ்ஜுத் தொழுகைக்காக எழுகிறார்கள். அப்போது சிறுவராயிருந்த இப்னு அப்பாஸ் (ரளி)

அவர்களும் வீட்டில் தங்கியிருக்கிறார்கள்.

சுய தேவையை முடித்துவிட்டு நபி வருகிறார்கள்; உளூ செய்வதற்காக தண்ணீர் தயாராக வைக்கப்பட்டுள்ளது. நபியவர்கள் உளூச் செய்வார்கள் என்பதை முன்னமே அறிந்து கொண்ட இப்பணியைச் செய்த இப்னு அப்பாஸ் (ரளி) அவர்களின் ஆற்றலைக் கண்டு நபியவர்கள் அவரது கல்வி ஞானத்திற்காக துஆ செய்கிறார்கள்; பின்னால் மிகப்பெரும் மார்க்க மேதையாக இப்னு அப்பாஸ் உருவெடுக்கிறார்கள்.

**சம்பவம் - 2**

அப்துல்லாஹ் இப்னு ஜஃபர் (ரளி) அவர்கள் சிறுவராக இருந்த போது விளையாட்டுச் சாமான்களை வாங்கி வியாபாரம் செய்கிறார்கள்; இதனைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் உமது வியாபாரத்தில் பரக்கத் உண்டாகட்டும் என துஆ செய்கிறார்கள்.

இது போன்றுள்ள நிகழ்வுகள் மனித வளங்களை எவ்வாறு கண்டறிவது என்பதற்கு வழிகாட்டுகின்றன. குறிப்பாக குழந்தைகளிடம் உள்ள திறன்களை சிறப்பாகக் கண்டறிந்து அவற்றை சீரமைப்பதும், வளர்ச்சி பெறச் செய்வதும் இன்றியமையாததாகும்.

நபி (ஸல்) அவர்கள் குழந்தைகளிடமுள்ள அதாவது நபித்தோழர்களில் சிறு பிராயத்தில் இருந்தவர்களின் திறன்களை கண்டறிந்து அதற்கு தகுந்தார் போல பாராட்டியுள்ளார்கள்.

அலீ (ரளி) அவர்களைப் பார்த்து நீர் என்னைச் சேர்ந்தவர் என்றும் ஜஃபர் (ரளி) அவர்களைப் பார்த்து உமது தோற்றமும், குணமும் என்னைப் போன்றுள்ளது என்றும் ஜைத் (ரளி) அவர்களைப் பார்த்து என் மகனே! என்று அழைத்தும் அவர்களை ஊக்கப்படுத்தினார்கள்.

இந்த வகையில் குழந்தைகளிடம் காணப்படும் ஒவ்வொரு அசைவுகளையும் கூட கவனிக்க வேண்டும். குழந்தைகளுக்கு நடைமுறை வாழ்வைக் கற்றுத்தர வேண்டும். நல்ல நல்ல மனிதர்களைக் காட்ட வேண்டும்.

மனிதர்களை சுரங்கம் என்று நபியவர்கள் குறிப்பிட்டதன் மூலம் நமது சந்ததிகளான ஒவ்வொரு குழந்தைகளும் எந்தளவிற்கு

முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

அவர்களை நாம் வீணடித்து விட்டால் மிகப்பெரிய கேள்விக்கு நாம் மறுமையில் ஆளாக நேரிடும். எனவே எதிர்காலச் சந்ததிகளை நல்ல நிலையில் உருவாக்கிக் கொண்டு வருவதற்கான பொறுப்பு பெற்றோர்கள், ஆசிரியர்கள், உறவினர்கள், நண்பர்கள், சமூக தலைவர்கள் என எல்லோருக்கும் இது விஷயத்தில் முக்கியப் பங்குண்டு என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

## நமது சந்ததிகளை தாழ்வு மனப்பான்மையுள்ளவர்களாய் மாற்றிட வேண்டாம்

மனித வளத்தினை உருவாக்குவதில் எதிர்கால தலைமுறை முக்கியத்துவம் பெறுகிறார்கள் என்பதை முன்னரே பார்த்தோம். அந்த தலைமுறை உருவாக்கத்தில் தாழ்வு மனப்பான்மைகளற்ற தன்னம்பிக்கையுள்ள தலைமுறையை உருவாக்க வேண்டும். ஏனெனில் தாழ்வுமனப்பான்மை எதிர்காலத் தலைமுறையின் உருவாக்கத்தை சூனியமாக்கி விடும்.

இதனைக் களைவதில் நபி (ஸல்) அவர்கள் கடும் முயற்சி செய்தார்கள். இதற்கு ஜுலைபிப் (ரளி) என்ற நபித்தோழரின் வரலாறு சான்றாகும்.

## சம்பவம்

ஜுலைபிப் (ரளி) அவர்கள் நபித்தோழர்களிலேயே குள்ளமான மனிதர். அழகற்றவர். ஒரு சமயம் மதீனாவின் ஒரு அன்ஸாரிப் பெண்ணை நபி (ஸல்) அவர்களுக்கு மணமுடித்துக் கொடுக்க விருப்பப்பட்டு அப்பெண்ணின் தந்தை நபியிடம் வந்து வேண்டுகோள் வைக்கிறார்.

ஆனால் நபி (ஸல்) அவர்கள் தோழர் ஜுலைப் (ரளி) அவர்களுக்கு திருமணம் செய்து கொடுக்கும்படி கூறுகிறார்கள். தந்தையோ தாங்கள் அல்லாத வேறு நபர் எனில் வீட்டில் என் மனைவியிடம் ஆலோசித்து வருகிறேன் எனக்கூறி வீட்டிற்கு வந்து நடந்ததை கூறுகிறார். ‘ஜுலைபிப்’ என்றால் வேண்டாம் என்ற முடிவிற்கு வருகின்றனர்.

ஆனால் இதனை அறைக்குள்ளிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த மணப்பெண், நபியவர்கள் முடிவு செய்கின்ற நபரையே நான் திருமணம் செய்து கொள்கிறேன் என சம்மதிக்கிறார். திருமணமும் முடிந்து சிறப்பாக வாழுகின்றனர்.

இந்நிலையில் ஒரு போர்க்களம்; இதில் நபிதோழர் ஜுலைபிப் (ரளி) அவர்களும் கலந்து கொள்கிறார்கள்; போர் முடிந்து தோழர்களிடம் எல்லோரும் இருக்கிறார்களா? என நபியவர்கள் விசாரிக்கிறார்கள். ஜுலைபிப் இல்லை என தெரிந்து கொண்டு போர்க்களம் சென்று பார்க்கிறார்கள். ஜுலைபிப் (ரளி) ஷஹீதாக்கப்பட்டுக் கிடந்தார்கள்; அவரைச் சுற்றி ஏழு எதிரிகள் கொல்லப்பட்டிருந்தனர்.

**(சம்பவச் சுருக்கம்)**

மேற்கூறப்பட்ட வரலாற்று நிகழ்வில் நாம் கவனிக்க வேண்டியது சாதாரண நபித்தோழராக கருதப்பட்ட ஒருவரை நபி (ஸல்) அவர்கள் வெளிக் கொண்டு வந்து, சமூகத்தில் அந்தஸ்துடையவராக உருவாக்கி மிகப்பெரும் வீர வரலாற்றிற்குச் சொந்தமான ஒரு தியாகியாக மாற்றிக் காட்டியதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

மனித வளங்களை மேம்படுத்தும் விஷயத்தில் சமகால முஸ்லிம்கள் இது போன்றுள்ள முன்மாதிரிகளை நடைமுறைப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

மேற்கூறியது போன்ற நபி (ஸல்) அவர்களது எண்ணற்ற நடைமுறைகள் அவர்களது வாழ்வில் குவிந்து கிடக்கின்றன. இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு சமகால முஸ்லிம் சமூகத்தின் பெற்றோர்களும், ஆசிரியர்களும், சமூகப் பொருப்பாளர்களும் செயல்படும் பட்சத்தில் நமது எதிர்காலத் தலைமுறையினரிலிருந்து நல்ல ஆற்றல் மிக்க மனிதவளத்தினை முஸ்லிம்கள் அடைந்து கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

**(இக்கட்டுரை இணையதள**

**சொற்பொழிவிலிருந்து தொகுக்கப்பட்டது)**